## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.39/2018

வாதி தரப்பு 1வது சாட்சி வள்ளிக்கண்ணு என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. ஜெயஸ்ரீ, நகல் பிரிவு கண்காணிப்பாளர்/கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க்(பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. வள்ளிக்கண்ணு | வயது | : | 58/23 |
| கணவர் பெயர் | : | சந்திரசேகர் | தாலுகா | : | ஆலங்குடி |
| கிராமம் | : | சேந்தாக்குடி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-27.11.2023

வா.சா.1

**<u>2,3, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ஆதியில் வழக்கு சொத்து கோவிந்தம்மாளின் கணவரும் 3ம் பிரதிவாதியின் தந்தையுமான அரங்குளவன் (எ) அரங்குளலிங்கம் என்பவருக்கு சொந்தமானது என்று நான் சொல்லவில்லை.

2. 1ம் பிரதிவாதி முனியாண்டி என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

3. 1ம் பிரதிவாதி முனியாண்டிக்கு என் தகப்பனார் தனியாக சொத்து ஒதுக்கி கொடுக்கவில்லை.

4. எனக்கு 30 வருடங்களுக்கு முன்பே திருமணமாகிவிட்டது என்றால் சரிதான்.

5. என்னை திருமணம் செய்து கொடுத்த ஊர் சேந்தாக்குடி என்றால் சரிதான். அது தாவா சொத்திலிருந்து 25 கி.மீ தூரத்தில் சேந்தாக்குடி உள்ளது என்றால் சரிதான்.

6. 2ம் வாதி சரசுக்கு 20 வருடங்களுக்கு முன்பே திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். அவரை அரிமளத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அரிமளமும் சொத்து இருக்கும் இடத்திலிருந்து 25 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் இருக்கலாம்.

7. எனது அம்மா காத்தாயியை ஏற்கனவே வேறு ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே திருமணம் செய்து கொடுத்தவர் பெயர் எனக்கு தெரியாது. என் தாயாருக்கு முதல் திருமணம் செய்ததன் மூலம் தான் நான் பிறந்தேன் என்றால் சரிதான்.

மு.மா.நீ,

8. பின்னர் தான் ரெங்கன் என்பவருக்கு என் தாயாரை திருமணம் செய்தார்கள் என்றால் சரிதான்.

9. என் அப்பா உயிருடன் இருக்கும்போதே எனது அண்ணனுக்கும், எனது தம்பிக்கும் சொத்துக்களை பிரித்துக்கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. என் அம்மா பெயரில்தான் சொத்துக்கள் உள்ளது.

10. வழக்கு சொத்திற்கு அரங்குளவன் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் இல்லை. காத்தாயி பெயரில்தான் உள்ளது.

11. அரங்குளவனுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு விவாகரத்து வழக்கு போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

12. அந்த வழக்கு போட முனியாண்டிதான் என்னை அழைத்து சென்றார் என்றால் இல்லை.

13. விவாகரத்து வழக்கு போடுவதற்கு காரணம் 1ம் பிரதிவாதியின் மனைவிக்கும், 2ம் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே தொடர்பு இருந்ததுதான் காரணம் என்றால் சரிதான்.

14. வழக்கு சொத்து இடம் மூன்று பகுதிகளாக உள்ளது என்றாலும், அதில் தெற்கில் உள்ள பகுதியை விற்றுவிட்டார்கள் என்றாலும் சரிதான்.

15. அதில் நடுப்பகுதி அரங்குளவன் பெயரில் உள்ளது என்றாலும், அதை பொறுத்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான்.

16. நடுப்பகுதியில் கிழக்கே உள்ள இரண்டு பிளாட்டுக்களை விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தை அரங்குளவன் இருக்கும்போதே விற்கப்பட்டது என்றால் சரிதான்.

17. வடக்கே முனியான்டிக்கு ஒதுக்கி கொடுக்கப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். முனியாண்டிக்கு ஒதுக்கி கொடுக்கப்பட்ட சொத்தை பொறுத்து வழக்கு போடவில்லை என்றால் சரிதான்.

18. அவ்வாறு விற்ற சொத்திலிருந்து வந்த வருவாயில் ரூ.50,000/-த்தை என் பெயருக்கு முனியாண்டி வைப்பீடு செய்தார் என்றால் இல்லை. நான் ரொக்கமாக ரூ.1,00,000/- வாங்கியுள்ளேன்.

19. அதேபோல் 2ம் வாதி சரசுக்கும் ரூ.1,00,000/- முனியாண்டி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

20. அதுபோக ரூ.50,000/- என் பெயரிலும், சரசு பெயரில் ரூ.50,000/-மும் வைப்பீடு செய்ய முனியாண்டியிடம் கொடுக்கப்பட்டது என்றாலும், அவர் வைப்பீடு செய்யாமல் ஏமாற்றிவிட்டார் என்றால் இல்லை. எனது அம்மா காத்தாயிக்கு

ரூ.1,00,000/- கொடுத்தார்கள் என்றால், கொடுத்திருக்கலாம் அது எனக்கு தெரியாது.

21. வழக்கு சொத்தில் ஒரு ஆர்.சி.சி வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில்தான் கோவிந்தம்மாளும், மீனாட்சியும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

22. அந்த வீட்டு முகவரிக்குத்தான் 2ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

23. எனது அம்மா காத்தாயி பெயரில் பட்டா உள்ளது என்பதை காட்ட பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

24. அரங்குளவன் இறக்கும்போது அவரது மனைவி மற்றும் குழந்தைகளுடன் முனிக்கோவிலுக்கு அருகில் உள்ள வீட்டில் வசித்து வந்தார் என்றால் அந்த வீட்டில் இருந்தார். ஆனால் மனைவி மற்றும் குழந்தைகளுடன் சேர்ந்து வசிக்கவில்லை.

25. அந்த விவாகரத்து வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் இல்லை.

26. அரங்குளவனின் மகன் விஸ்வநாதன் சாலை விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதில் கிடைத்த இழப்பீட்டு பணத்தை 2ம் பிரதிவாதி வாங்கிக்கொண்டார் என்றால் சரிதான். அந்த இழப்பீட்டு பணத்தை கொண்டுதான் தாவா சொத்தில் உள்ள ஆர்.சி.சி வீட்டை 2ம் பிரதிவாதி கட்டினார் என்றால் இல்லை. ஏற்கனவே அந்த இடத்தில் ஒரு கூரை வீடு இருந்தது என்றால் சரிதான்.

27. அந்த ஆர்.சி.சி வீட்டின் முன்பக்கத்தில் மூன்று கடைகள் உள்ளது. அந்த கடைகளின் வாடகையை கோவிந்தம்மாள்தான் வாங்கி கொண்டு வருகிறார். எனக்கு தரவில்லை.

28. அதேபோல் முனியாண்டிக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலும் கடை கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த கடை வாடகையை முனியாண்டிதான் வாங்கி வருகிறார் என்றால் சரிதான். எனக்கு தரவில்லை.

29. அரங்குளவன் இறக்கும் வரையில் குடும்பத்தில் எந்த சொத்து பிரச்சினையும் இல்லை. அரங்குளவன் இறந்த பிறகு அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

30. 2ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் சொத்தை கொடுக்க கூடாது என்றும், அந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முனியாண்டியுடன் சேர்ந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

31. அரங்குளவன் அளவுக்கு அதிகமாக குடித்ததால்தான் இறந்துவிட்டார் என்றால் இல்லை. அவர் இறக்கும்போது அவருக்கு 37 வயது.

32. ஏற்கனவே எங்களுக்கு வரவேண்டிய தொகையை கொடுத்துவிட்டார்கள் என்றாலும், அரங்குளவன் பெயரில் பட்டா இருந்ததால் அவர் விற்றுவிடுவார் என்ற எண்ணத்தில் எனது தாயார் பெயருக்கு பெயரளவில் எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

33. எனது தாயாரின் இறப்பிற்கு பின்னர் என் தாயார் மற்றும் அரங்குளவன் பெயரில் உள்ள சொத்துக்களின் ஆவணங்கள் முனியாண்டியின் வசம் இருந்தது என்றாலும், அதை வாங்கித்தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.